# சைவமும் தமிழும்

## (பிரிவு - 5)

இறைவனை அடைவதற்கு வகுக்கப்பட்ட பாதையே சமயம் எனப்படும். ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமானை வழிபடும் சமயமே சைவசமயமாகும். இதேபோல் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் தோன்றியது தான் தமிழ். எம்பெருமான் முருகனும் அகத்தியரும் கட்டிக்காத்த தமிழ் இன்று உலகமெங்கும் வீறுநடை போடுகிறதென்றால் சைவமும் தமிழும் ஒரு மனிதனுக்கு இருகண்கள் போன்றவை. பண்டைக் காலத்திலே தமிழ் மொழியை வளர்த்தவர் அகத்தியர். இவர் சிவபெருமானிடத்திலேயே முத்தமிழைக் கற்றுணர்ந்து "அகத்தியம்" என்ற முத்தமிழ் இலக்கண நூலை இயற்றினார். ஒரு சந்தர்ப்பத்தில் சிவனுக்கும் உமைக்கும் கைலையில் திருமணம் நடக்க சர்வலோக ஜீவராசிகளின் பாரம் தாங்காமல் தென்பகுதி சரிந்தது. இதை சமப்படுத்த அகத்தியரை தென்பகுதிக்குப் போகச் செய்தார்.

சங்க காலத்துப் புலவர்கள் கடவுளைப் பற்றி பாடிய பாடல்கள் அக்காலத்தில் சைவம் எந்த நிலையில் இருந்தது என்பதை அறியக்கூடியதாக உள்ளது. சங்கம் மருவிய காலத்தில் சட்டநூலாக வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகையினை எடுத்துக்காட்டும் நூலாக திருக்குறள் உள்ளது.

பல்லவர் காலத்து பக்தி இலக்கியங்கள் தமிழ் இலக்கிய வரலாற்றிலே குறிப்பிடத் தக்கவை. பண்டைக் காலத்தில் தாழிசை, துறை, விருத்தம், யாப்பு வகைகள் இருந்தாலும் அவை குறைந்து வெண்பா யாப்பு பக்திப் பெருக்கை புலப்படுத்துவதற்குக் காரணங்கள் ஆயின. இக்காலப்பாடல்கள் பதிகவடிவில் இருந்தன. அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும் பாடிய பதிகங்கள் பக்தி இலக்கியங்களாக மிளிர்கின்றன. "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்னும் பதிகத்தைப் பார்த்தால் சைவமும் தமிழும் சேர்ந்த நிலை எப்படி என்று தெரிகிறதல்லவா?

சோழர் காலம் ஒரு காவிய உற்பத்திக்காலம் எனலாம். ஏன் தெரியுமா? அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருளையும் எடுத்துக்காட்டும் இலக்கியம், காவியம் எனப்படும். இக்காலத்தில் தான் நம்பியாண்டார் நம்பியால் சைவத் திருமுறைகள் வகுக்கப்பட்டன. பேரிலக்கியங்கள் வளர்ந்த காலம் ஆற்றல் மிக்க தமிழ் மொழியின் பெருமையை இராமாயணம் மூலமாகக் கம்பன் காட்டியுள்ளார்.

இட்ட அடிநோக எடுத்த அடி கொப்பளிக்க வட்டில் சுமந்து வரும் என்று அம்பிகாபதி, அமராவதியைப் பார்த்துப் பாடல் காவியம் எழுதிய நாயகனான கம்பரைக் காப்பாற்ற சரஸ்வதி தேவியே உதவி புரிகின்றார். இங்கு சைவமும், தமிழும் பின்னிப்பிணைத்த நிலையை பார்க்கிறோமல்லவா?

பக்திச்சுவை நனி சொட்டச்சொட்ட பாடிய கவிவல்லவன் என்று பாராட்டப்பட்ட சேக்கிழார் சைவநெறி தழைக்க வந்த 63 நாயன்மாரின் சிறப்பைக் கூறிய பெரியபுராணம் சைவ சமயத்தோருக்கு ஒரு கலங்கரை விளக்கம் போன்றது. அதுமட்டுமா? கந்தபுராணமும் ஒரு பெருங்காப்பியங்களில் ஒன்றாகும்.

பதி, பசு, பாசம் என்ற முப்பொருளின் உண்மை அவற்றின் இலக்கணம் வீடுபேற்றிற்குரிய நெறிகளை எடுத்துக் காட்டுகிறது. சைவ சித்தாந்த சாஸ்திரம் 14 ஆகும். அதுமட்டுமா, வாக்கிற்கு அருணகிரி உன்னைப் போல் மெய்யா ஒரு சொல் விளம்பினன் யார்? என்று பாராட்டப்பட்டவர் முருகப் பெருமானை நினைத்து திருப்புகழ் பாடியுள்ளார். இவைகளிலிருந்து சைவமும், தமிழும் தழைத்தோங்கிய நிலை எப்படி என்று தெரிகிறது அல்லவா?

ஐரோப்பிய காலம், 20ம் நூற்றாண்டில் பிற காப்பியங்களால் சைவத்திற்கும், தமிழுக்கும் பங்கம் வந்து விடுமோ என்று அஞ்சி அதில் கூடிய கவனம் செலுத்தலானார். ஆறுமுகநாவலரின் அரியசேவையில் சைவமும், தமிழும் மீண்டும் வளர்ந்தன. பாரதியார், பாரதிதாசன், தேசிக விநாயகம் பிள்ளை போன்றவர்கள் தமிழுக்கு தொண்டு ஆற்றினார்கள். சிந்து, தெம்மாங்கு, யாப்பு வகைகளைக் கையாண்டனர். பின் எழுந்த உரைநடை, சிறுகதை இலக்கியங்களிலும் சைவத்தின் சிறப்பினைக் காணக்கூடியதாக இருந்தது.

அம்மை, அப்பர் தான் உலகம் என்ற ஐங்கரனிடம், ஔவைப் பாட்டி பாலும், தெளிதேனும், பாகும் பருப்பும் தருகிறேன் நீ எனக்கு சங்கத் தமிழாகிய இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைத் தா என்று எவ்வளவு அழகாக கேட்கின்றார்.

அன்று பாண்டியன் கேள்விக்கு விடைபகன்ற எம்பெருமானைப் பார்த்து தமிழ்ச் சங்கத் தலைவரான நக்கீரர் வந்திருப்பது இறை என்று அறிந்தும் தமிழின் மேல் பற்று வைத்திருந்ததால் அதற்கு பங்கம் வரக்கூடாது என்பதற்காக நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று வாதாடுகிறார். இதிலிருந்து சைவமும் தமிழும் எவ்வளவு தூரம் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து வளர்ந்திருக்கின்றன என்பது தெரிகிறது அல்லவா?

நன்றி வணக்கம்